


Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 104

செவ்வாய்க்கிழமை
10 மார்ச் 2026

மாசி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50


கடந்த வருடத்தில் மட்டும்

# ரூபா 62 கோடி யாழில் மோசடி

## பொதுமக்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறு பொலிஸ் அத்தியட்சகர் ஜெயமகா அறிவுறுத்து

**யாழ்ப்பாணம், மார்ச் 10**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடந்த வருடம் 62 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது. இலங்கையின் ஏனைய மாவட்டங்களைக் காட்டிலும், யாழ்ப்பாணத்திலேயே மோசடிகள் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன - இவ்வாறு யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ.பி.எஸ்.ஜெயமகா தெரிவித்தார்.**

»11



# ஹெரோய்னுடன் இருவர் கைது!

## போதை மாத்திரைகளும் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10

ஹெரோய்ன் மற்றும் போதை மாத்திரைகளுடன் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்.மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொழும்பிலிருந்து

»11

இந்தியாவுக்குக் கடத்தப்பட்ட


# 6 கிலோ தங்கம் மாதகலில் மீட்பு

## இரு சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 10

மாதகலில் இருந்து, கடல் வழியாக இந்தியாவுக்குக் கடத்தப்பட்ட 6 கிலோவுக்கும் மேற்பட்ட தங்கக் கட்டிகள் கடற்

»11



# ஈரானியப் படையினரை உடன் வெளியேற்றுக!

## கொழும்பில் போராட்டம்

கொழும்பு, மார்ச் 10

ஈரானியப் படையினருக்கு இலங்கை அடைக்கலம் கொடுக்கக்கூடாது என்று பத்தரமுல்ல சீலரத்ன தேரர் வலியுறுத்தியுள்ளார். ஈரானியக் கடற்படையினர் சிலருக்கு இலங்கை ஆதரவு வழங்கியுள்ளதைக் கண்டித்து கொழும்பில் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றது. இந்தப் போராட்டத்

»11

மைத்திரியுடன் காணப்பட்ட

# மகளைத் தேடித்திரிந்த தந்தை பரிதாபச் சாவு!



வவுனியா, மார்ச் 10

காணாமல் ஆக்கப்பட்ட தனது மகளைத் தேடித்திரிந்த வவுனியாவைச் சேர்ந்த தந்தையொருவர் நேற்று உயிரிழந்தார். வவுனியா - நெடுங்கேணி பகுதியைச் சேர்ந்த காசிப்பிள்ளை என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

»11



"யாழ்ப்பாணத்தார் எண்டாலே புத்திசாலியள் எண்ட காலம் மாறி இப்ப ஏமாளியள் எண்டாகிப் போட்டுது கண்டியளோ"

முச்சந்தி முரளி

# எரிபொருள் விலைகள் கணிசமாக அதிகரிப்பு

விரிவு பக்கம்:- 11

# சிறுமி மீது வன்புணர்வு; குற்றவாளிக்குக் கடூழியம்

முல்லைத்தீவு, மார்ச் 10

முல்லைத்தீவு - நாயாறு பகுதியில், சிறுமியொருவரை வன்புணர்ந்த குற்றவா ளிக்கு, கிளிநொச்சி மேல்நீதிமன்றத்தால் 10 வருடகால கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - நாயாறு பகுதியில் கடந்த 2015ஆம் ஆண்டு 12 வயதுச் சிறுமியொருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். இதுதொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாரிடம் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, சந்தேகநபர் கைது செய்யப்பட்டு அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

»11

நயினாதீவில் கொடூரம்

# பூசகர்களிடையே தகராறு ஒருவர் வெட்டிக்கொலை!



யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்ப்பாணம் நயினாதீவில், இரண்டு பூசகர்களிடையே ஏற்பட்ட தகராறு காரணமாக, ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். கிருஷ்ணகுமார் (வயது-40) என்பவரே உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

நயினாதீவில் உள்ள விநாயகர்

»11

# பொருளாதார நெருக்கடிகள் இலங்கையைப் பாதிக்காது

## மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 10

மத்திய கிழக்குப் போரால் ஏற்படும் உலகளாவிய பொருளாதார நெருக்கடியை, வெற்றிகர

»11

ஊழல் குற்றச்சாட்டில்

# முன்னாள் எம்.பி. சஜின் வாஸ் கைது

கொழும்பு, மார்ச் 10

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தன ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் கைது

»11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 09.03.2026
சீட்டிழுப்பு இலக்கம் 4370
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 05 27 44 56
விசேட எழுத்து U

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 09.03.2026
சீட்டிழுப்பு இலக்கம் 1437
வெற்றி இலக்கினம் கும்பம்
வெற்றி இலக்கங்கள் 36 41 46 60

**NLB ஜய**
திகதி 09.03.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0396
ஆங்கில எழுத்து B
வெற்றி இலக்கங்கள் 3 9 3 1

**மெகா பவர்**
திகதி 09.03.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2476
ஆங்கில எழுத்து K
சுப்பர் இலக்கம் 13
வெற்றி இலக்கங்கள் 01 21 22 52

**மஹஜன சம்பத**
திகதி 09.03.2026
சீட்டிழுப்பு இலக்கம் 6128
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 0 2 4 8 1 9

**தன நிதானய**
திகதி 09.03.2026
சீட்டிழுப்பு இலக்கம் 2158
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 04 16 23 42
விசேட எழுத்து T

**சுப தவசக்**
திகதி 09.03.2026
சீட்டிழுப்பு இலக்கம் 0244
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 24 31 62

### மாகாணத் தேர்தல் முறைமை

# விதப்புரைகள் கிடைத்தால் இந்த ஆண்டுக்குள் தேர்தல்

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 10

**மாகாணசபைத் தேர்தலை எந்த முறைமையில் நடத்தலாம் என்று ஆராய்ந்து விதப்புரைகளை முன்வைப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழு தாமதமில்லாமல் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். மூன்று மாதகாலத்துக்குள் அறிக்கை சமர்ப்பித்தால் இந்த ஆண்டுக்குள் மாகாணசபைத் தேர்தலை நடத்தலாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது-

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் சகல தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். மாகாணசபைத் தேர்தலை வெகுவிரைவாக நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளோம்.

மாகாணசபைத் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்பது பற்றி ஆராய்வதற்கு தற்போது விசேட செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு நியமிக்கப்பட்டு மூன்று மாதகாலத்துக்குள் விதப்புரை அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். அதனால் தாமதமில்லாமல் ஆராய்வுகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறோம். மூன்று மாதகாலத்துக்குள் அறிக்கை சமர்ப்பித்தால் இந்த ஆண்டுக்குள் மாகாணசபைத் தேர்தலை நடத்தலாம்- என்றார். (ஏ-இ)

## மசகு எண்ணெய் விலை அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 10

மத்திய கிழக்கில் அதிகரித்துவரும் போர்ப் பதற்ற நிலை காரணமாக சந்தையிலிருந்து தினமும் 20 மில்லியன் பீப்பாய்களின் மசகு எண்ணெய் விநியோகம் தடைப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதன்முறையாக உலகளாவிய ரீதியிலான மசகு எண்ணெய் ஒரு பீப்பாயின் விலை 100 அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது.

சர்வதேச சந்தை அளவீடான பிரெண்ட் மசகு எண்ணெய் விலை, ஆசிய பசுபிக் சந்தைகளில் புதிய வார வர்த்தகம் தொடங்கியதும் 12.2 சதவீதம் உயர்ந்து ஒரு பீப்பாயின் விலை 104.05 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. (ஏ-இ)

## வீட்டின் கட்டிலுக்கடியில் 32 லீற்றர் பெற்றோல் மீட்பு

கொழும்பு, மார்ச் 10

வீடொன்றில் கட்டிலுக்கடியில் சூட்சுமமாக மறைத்துவைக்கப்பட்டிருந்த சுமார் 32 லீற்றர் பெற்றோல் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. கல்முனை புறநகர்ப்பகுதியில் கடை ஒன்றுடன் இணைந்த வீடொன்றில் பெற்றோல் விற்பனை செய்யப்படுகின்றது என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து குறித்த வீட்டை முற்றுகையிட்ட பொலிஸார், கட்டிலுக்கடியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த பெற்றோலை மீட்டனர். அத்துடன் சந்தேகநபரான பெண்ணைக் கைதுசெய்து பிணையில் விடுவித்தனர். (க-இ)



## பிலிப்பைன்ஸ் பறந்தார் பிரதமர்

கொழும்பு, மார்ச் 10

பிரதமர் ஹரிணி அமரசூரிய பிலிப்பைன்ஸ் பயணமாகியுள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஆசிய அபிவிருத்தி வங்கி விடுத்த விசேட அழைப்புக்கு அமைய, பிரதமர் உத்தியோக பூர்வப் பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு அவர் ஆசிய அபிவிருத்திவங்கியின் தலைமையகத்தில் நடைபெறவுள்ள சர்வதேச மகளிர் தின பிரதான நிகழ்வில் உரையாற்றவுள்ளார். அத்துடன் பிலிப்பைன்ஸ் அரசாங்கத்தின் அமைச்சர்களுடனும் இருதரப்புப் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடவுள்ளார். (ஏ-இ)

## 40 இலட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருள் மீட்பு!

கொழும்பு, மார்ச் 10

தொடங்கொட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் 225 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. அதன் பெறுமதி 40 இலட்சம் ரூபா என்று தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகத்துக்கு இடமாகப் பயணித்த முச்சக்கரவண்டியொன்றைச் சோதனையிட்டபோதே போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. முச்சக்கரவண்டிச் சாரதியும் கைதுசெய்யப்பட்டுள்ளார். கைதுசெய்யப்பட்டவர் தொடங்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடையவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. கைதுசெய்யப்பட்ட நபர் களுத்துறைப் பகுதியில் இயங்கும் ஒரு பிரதான போதைப்பொருள் கடத்தல் கும்பலுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படுகிறார் என்றும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஏ-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 09.03.2026 தினம் திங்கட்கிழமை
வெற்றி வாரம் 0836
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கம் 8 6 9 7 7 8

**Super Ball**
திகதி 09.03.2026 தினம் திங்கட்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 3102
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கம் 16 25 64 68

**சனிதா**
திகதி 09.03.2026 தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கம் 44 50 66 79
வெற்றி வாரம் 5263

**SASIRI**
திகதி 09.03.2026 தினம் திங்கட்கிழமை
வெற்றி வாரம் 0932
வெற்றி இலக்கம் 20 23 43

**லக்ன ராசி**
திகதி 09.03.2026 தினம் திங்கட்கிழமை
சிம்மம்
வெற்றி இலக்கம் 05 10 36 46
சீட்டிழுப்பு வாரம் 4814

**KAPRUKA**
திகதி 09.03.2026 தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து F
சுப்பர் இலக்கம் 30
வெற்றி இலக்கம் 15 19 47 52
வெற்றி வாரம் 2278

**அத கோடிபதி**
திகதி 09.03.2026 தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கம் 14 20 23 59
வெற்றி வாரம் 2928

## நான்கு இலங்கையர்கள் மத்திய கிழக்கில் காயம்

கொழும்பு, மார்ச் 10

மத்திய கிழக்கில் அண்மையில் நடைபெற்ற தாக்குதல்களில் இலங்கையர்கள் நால்வர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளனர் என்று வெளிவிவகாரப் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில், காயமடைந்த நான்கு இலங்கையர்களில் மூவருடன் நான் தொலைபேசி வாயிலாக உரையாடினேன். அவர்கள் தற்போது பாதுகாப்பாக இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

அத்தோடு அவர்கள் சிகிச்சைகளின் பின்னர் நலமடைந்து வருகின்றனர்.

நான்காவது நபரைத் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொள்ள முடியாதபோதிலும், அவரும் பாதுகாப்பாக மருத்துவமனையிலிருந்து வெளியேறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கு அரசாங்கம் முன்னுரிமை அளிக்கின்றது. அந்தந்தப் பிராந்தியங்களில் உள்ள இலங்கையின் தூதரகங்கள் ஊடாக நிலைமைகள் மிக நெருக்கமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலகளாவிய பணவீக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்பு

## சர்வதேச நாணயநிதியம் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 10**
**எரிபொருள் பாதுகாப்பு உயர்மட்டப் பேசுபொருளாக உள்ள நிலையில், உலகளாவிய ரீதியாக பணவீக்கம் ஏற்படும் என சர்வதேச நாணயநிதியம் தெரிவித்துள்ளது.**

மத்திய கிழக்கில் நிலவிவரும் போர் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. 10 சதவீத எண்ணெய் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து 40 புள்ளி உலகளாவிய பணவீக்கம் ஏற்படும் என்று சர்வதேச நாணயநிதியத்தின் நிர்வாகப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா தெரிவித்துள்ளார்.

ஜப்பான் நிதியமைச்சின் அனுசரணையுடன் நடந்த கருத்தரங்கிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். எதற்கும் தயாராக இருக்குமாறு கொள்கை வகுப்பாளர்களுக்கு எனது ஆலோசனைகளை வழங்கியுள்ளேன் என்றும் அவர் அங்கு குறிப்பிட்டுள்ளார். (எ-இ)




## 3,700 மெ.தொன் எரிவாயு சிலிண்டர் உள்நாட்டுச் சந்தைக்கு விநியோகம்

கொழும்பு, மார்ச் 10
உள்நாட்டுச் சந்தைக்கு நேற்று 3,700 மெட்ரிக் தொன் எல்.பி. எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டன என்று லிட்ரோ கேஸ் லங்கா நிறுவனம் அறிவித்துள்ளது. அண்மைக் காலங்களில் மொத்தம் 7,900 மெட்ரிக்தொன் எரிவாயு சிலிண்டர்கள் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன என்று லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் சன்ன குணவர்தன தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மார்ச் மாதத்துக்காக 38,000 மெட்ரிக்தொன் எரிவாயு சிலிண்டர்கள் கோரப்பட்டுள்ளது. கூடுதலாக 30,000 மெட்ரிக்தொன் எரிவாயு சிலிண்டர்கள் தற்போது மாலைதீவில் சேமிக்கப்பட்டுள்ளன. கோரப்பட்டுள்ள மற்றுமொரு கப்பல், 33,000 மெட்ரிக்தொன் எரிவாயு சிலிண்டர்களுடன் மார்ச் 17ஆம் திகதி மாலைதீவை வந்தடைய உள்ளது என்றார்.

இதேவேளை, அண்மையில் இலங்கையை வந்தடைந்த கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட 3,700 மெட்ரிக்தொன் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கும் பணிகளைத் தமது நிறுவனம் தற்போது முன்னெடுத்து வருகின்றது என்று லாப்ஸ் கேஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி நலிந்த குருகுலசூரிய தெரிவித்துள்ளார். (எ-இ)

## எரிவாயு சிலிண்டர்கள் பெறுவதில் திண்டாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 10
எரிவாயு சிலிண்டர் விநியோகம் சீராக நடைபெறுகின்றது என்று தெரிவிக்கப்பட்டாலும், யாழ்ப்பாண மாவட்டத்தில் எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுக் கொள்வது கடினமாகவே உள்ளது என்று நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர். எரிவாயு சிலிண்டர்களைத் தேவைக்கேற்ப பெற்றுக்கொள்ளமுடியவில்லை என்றும், எரிவாயு சிலிண்டருக்காகக் காத்திருக்கவேண்டியுள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அதேவேளை, தங்களுக்கு வழமையாக வழங்கப் படும் எண்ணிக்கைக்குக் குறைவாகவே தற்போது எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படுகின்றன என்று வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (எ-இ)



## எம்.ஆர்.ஐ. ஸ்கேன் இயந்திரம் பழுது

கொழும்பு, மார்ச் 10
கொழும்பு தேசிய மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவிலுள்ள எம்.ஆர்.ஐ. ஸ்கேன் இயந்திரம் கடந்த 3ஆம் திகதி முதல் செயலிழந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. தேசிய மருத்துவமனையில் மேலதிகமாக இரண்டு எம்.ஆர்.ஐ. இயந்திரங்கள் பயன்பாட்டில் உள்ள போதிலும், இந்த இயந்திரத்தின் செயலிழப்பால் பெரும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. ஏற்கனவே பரிசோதனைகளுக்காக நேரத்தை ஒதுக்கியிருந்த நோயாளர்கள் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாமல் திருப்பி அனுப்பப்படுகின்றனர் என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (எ-இ)

## இலங்கை மத்திய வங்கியின் செப்புக்கம்பிகள் திருட்டு

கொழும்பு, மார்ச் 10
அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கியின் 16 மாடிகளைக் கொண்ட பழைய கட்டடத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்னல் கடத்தி அமைப்பின் செப்புக் கம்பிகளைத் திருடிய குற்றச்சாட்டில், ஒப்பந்த நிறுவனம் ஒன்றின் ஊழியர்கள் அறுவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடமிருந்து திருடப்பட்ட கம்பிகளில் சுமார் 30 கிலோகிராம் எடையுள்ள பகுதி பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. திருடப்பட்ட மொத்த செப்புக்கம்பிகளின் நீளம் 288 மீற்றர் எனவும், அவற்றின் சந்தைப் பெறுமதி சுமார் 42 இலட்சம் ரூபா எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நிர்வாகத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஒருவரால் கடந்த மாதம் 27ஆம் திகதி கோட்டை பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளை அடுத்தே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (எ-இ)

## வாக்களிச்ச கையுக்கே கைவிலங்கா?

மட்டக்களப்புப் பக்கத்தில இருந்து 'வீட்டுக்கட்சி' சார்பில பார்லிமெண்டுக்குப் போன அந்த 'சண்டித்தன' எம்.பி., கொழும்பு கோர்ட்ல வழக்கொண்டைப் போட்டிருக்கார். அந்த வழக்கின்ர எதிராளியள் ஆரெண்டு பார்த்தால், தமிழ்ச் சமூகச் செயற்பாட்டாளர்கள். இவையொண்டும் எலக்சனுக்காக 'சமூகச் செயற்பாட்டளர்' எண்டு பேருக்குச் சொல்லுற ஆக்களில்லை. எங்கையெல்லாம் அநியாயம் நடக்குதோ, எங்கையெல்லாம் கருத்துச் சுதந்திரத்தின்ர குரல்வளை நெரிக்கப்படுகுதோ அங்கையெல்லாம் முன்னுக்கு நிண்டு குரல் குடுக்கிற உண்மையான சமூகச் செயற்பாட்டாளர்மார். அப்பிடிப்பட்டவைக்கு எதிரா, உந்தச் சண்டித்தன எம்.பி. நிகழ்நிலை காப்புச் சட்டத்துக்குக்கீழ இந்த வழக்கைத் தொடுத்திருக்கிறார். இதில இருக்கிற ஆகப்பெரிய பம்பல் என்னெண்டால், இதே சட்டத்தை முந்தின அரசாங்கம் பார்லிமெண்டில கொண்டு வரேக்க 'இது சனத்தின்ர வாயையும்,கருத்துச் சுதந்திரத்தையும் அடைக்கிற சட்டம்' எண்டு சொல்லி எதிர்த்து வாக்களிச்சது இதே வீட்டுக் கட்சிதான். இப்ப அதே சட்டத்தைத் தூக்கிக்கொண்டு தன்ர எதிராளிகளை முடக்க எம்.பி. ஓடித்திரியிறதைப் பார்த்தால், சிரிப்பை அடக்க ஏலாமல் கிடக்கு.

இந்த வழக்கில இன்னொரு விசித்திரமும் இருக்குது. பார்லிமெண்டில இதே எம்.பி. கதிரையில இருந்து எம்பி எம்பித் தொண்டை கிழிய, "அரசாங்கத்தின்ர கடிதங்கள், சுற்றுநிருபங்கள் எல்லாம் தனிச் சிங்களத்தில வருது. எங்கட தமிழ்ச்ச்சனாங்கள் அதில என்ன எழுதி இருக்கெண்டு தெரியாமல் அந்தரிக்க வேண்டியிருக்கு. இனிமேல் தமிழையும், தமிழரையும் ஒதுக்காமல், உந்த ஆவணங்களை தமிழிலயும் குடுங்கோ" எண்டு அடிக்கடி கத்துறதைப் பார்த்திருப்பியள் இல்லாட்டி செய்தியளில கேள்விப்பட்டிருப்பியள். ஆனால், அதே எம்.பி. இப்ப சமூகச் செயற்பாட்டாளர்களுக்கு அனுப்பின கோர்ட் நோட்டீஸ் முழுக்க முழுக்கத் தனிச் சிங்களத்திலதான் இருக்குதாம்.

இதைவிடப் பெரிய கொடுமை என்னவெண்டால், இந்த வழக்கில 'எதிராளிகளா' இருக்கிற அந்தச் சமூகச் செயற்பாட்டாளர்களில சில பேர், இதே எம்.பி.க்கும் வீட்டுக்கட்சிக்கும் போன தேர்தல்ல வாக் குப் போட்ட ஆக்களாம். 'வாக்களிச்ச கைக்கே விலங்கு மாட்டுற' கதையா, தனக்கு வாக்குப் போட்ட சனத்துக்கே எதிரா வழக்குப் போட்டு, சிங்களத்தில கடிதம் அனுப்பி, அவையளைக் கோர்ட் படியேற வைக்கிறது எந்த ஊர் நியாயம்? பார்லிமெண்டில பேசுறது ஒண்டு, வெளியில செய்யிறது இன்னொண்டு எண்ட இவையின்ர தந்திரத்தை எங்கட சனம் இன்னும் விளங்காமத்தான் இருக்கு. தமிழ்த்தேசியம் எண்டது மேடையில மட்டும் இல்லை மல்லி! செயலிலயும் இருக்கோணும். இப்பிடிச் சொந்த சனத்துக்கு எதிராவே வழக்குப் போட்டு, மிரட்டிற எம்.பி.தான், வீட்டுக்கட்சியின்ர பார்லிமெண்ட் குழுத்தலைவர் எண்டதையும், இப்பிடிப்பட்டவர் பார்லிமெண்டில தமிழ்ச்சனத்துக்கு எதிரா என்னென்ன திருவிளையாடல்களைச் செய்யப்போறாரோ எண்டு நினைக்க பட்சிக்கே படபடப்பாத்தான் இருக்கு கண்டியளோ.

padsi@uthayan.com
-பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை குருமகா சந்நிதானத்தின் குருபூசை ஏப்ரல் 20ஆம் திகதி!

யாழ்ப்பாணம், மார்ச் 10

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன இரண்டாம் குருமகா சந்நிதான குரு பூசையை, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி முன்னெடுப்பது என சைவ அமைப்புகள் தீர்மானித்துள்ளன. அத்துடன், சுவாமிகளின் நினைவுகளை தாங்கிய வரலாற்று ஆவண மலரை வெளியீடுவது என்றும்தீர்மானிக்கப்பட் டது.

சைவ பரிபாலன சபையில், சைவ அமைப்புக்களின் இணையக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதன் போதே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கைலாசநாதர் பிள்ளையார் திருக்கோவில் கும்பாபிசேக குருக்கள் குழுவையும் கூட்டம் அங்கீகரித்துடன் இரு தரப்பு சட்டதரணிகள் ஊடாக நீதிமன்றத்துக்கு வெளிப்படுத்தவும் முடிவுசெய்யப்பட்டது. கைலாசநாதர் குடமுழுக்கு பணிகள் தொடர்பாக கூட்டத்தில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டதுடன், திருக்கோவில் பாரம்பரியத்தைப் பாதுகாக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அதேபோன்று, நல்லை ஆதீனத்தின் ஈழத்தமிழ் சைவப்பாரம்பரியம் பாதுகாக்க தொடந்து ஆதீனம் உயிர்ப்பாக இயங்க அனைவரும் பங்களிக்க வேண்டும் எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

தற்போது யாழிலிலுள்ள துறவிகள் குருபீடாதிபதிகளின் உதவியுடன், இளையவர்களுக்கு பயிற்றுவித்து எதிர்கால ஆதீனத்தை தேர்ந்தெடுக்க வலியுறுத்தப்பட்டது.

இன்றைய கூட்டத்தில் சைவ சமய குருமார் ஒன்றியங்களை சார்ந்த குருக்கள்மார்கள், சைவ சமய அமைப்புக்களான சைவ பரிபாலன சபை, சைவ மகாசபை, சைவ வித்யா விருத்தி சங்கம், இலங்கை சைவ சமய பேரவை உள்ளிட்ட அமைப்புக்களின் தலைவர்கள், சிவ மங்கையர் அமைப்பினர், யாழ். பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடாதிபதி, துறைத் தலைவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(ம)

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07 . 03 . 1937 | மறைவு 20 . 02 . 2025

**அமரர் செல்லையா விஸ்வலிங்கம் (விஷ்வப்பா)**

**(கலாபூசணம் - ஸ்தபதி)**

திதி: அட்டமி

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து - நீங்கள்
விண் நோக்கிச் சென்று ஓராண்டு சென்றாலும்
கண் விட்டு மறையாது உங்கள் நினைவுகள்

நாளை (11.03.2026) புதன்கிழமை காலை 8.00 மணிமுதல் முற்பகல் 11.00 மணிவரை பிரார்த்தனையும், 12 மணிமுதல் 4.00 மணிவரை நீர்வேலி வாய்க்காற்தரவை மூத்த விநாயகர் ஆலய மண்டபத்தில் மதிய போசனமும் இடம்பெறும்.

(CS/60902) J-1

**குடும்பத்தினர்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



உண்மை - நேர்மை - அஞ்சாமை

# இதயங்களில் பாயும் ஈட்டி

இலங்கையின் அரசியல் பரப்பில் 'வாக்குறுதி' என்பது தேர்தலுக்கு முந்தைய காகிதப் பூவாகவும், 'நிதர்சனம்' என்பது தேர்தலுக்குப் பிந்தைய முள் வேலியாகவும் மாறிவிடுவது ஒன்றும் புதிதல்ல. வடக்கு-கிழக்கு மாகாணங்களின் வீதியோரங்களில், தங்களின் உறவுகளைத் தேடித் தவித்துக் கொண்டிருக்கும் தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்போம் என்று மேடைக்கு மேடை முழங்கிவிட்டு, இன்று அதிகாரக்கதிரையில் ஏறியதும் அதே பழைய பல்லவியைப் பாடத் தொடங்கியிருக்கிறது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம். நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடுகள் அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் சமீபத்திய உரை, சர்வதேசப் பொறிமுறையை எதிர்பார்த்து நிற்கும் பல்லாயிரக்கணக்கான உறவுகளின் நெஞ்சில் பேரிடியாக விழுந்துள்ளது. சர்வதேசக் கட்டமைப்பு ஊடாக நீதியைப் பெறமுடியாது, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் மூலமே தீர்வு காணமுடியும் என்று அமைச்சர் கூறுவது, உண்மையில் நீதிக்கான கதவை அடைப்பதேயொழிய, திறப்பதல்ல.

கடந்த காலங்களில் உருவாக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் (ஓ.எம்.பி.) என்பது, ஒரு 'செயலற்ற இயந்திரம்' என்பதை வரலாறு ஏற்கனவே நிரூபித்துவிட்டது. அரசினால் நியமிக்கப்படும் அதிகாரிகளால், அரசாங்கத்தின் வரம்புகளுக்கு உட்பட்டே விசாரணைகளை முன்னெடுக்கமுடியும். இராணுவம் மற்றும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் எங்கே என்ற கேள்விக்கு, படையினரிடம் விசாரணை நடத்தி உண்மையை வெளிக்கொண்டுவரும் துணிச்சல் எந்தவொரு உள்நாட்டுப் பொறிமுறைக்கும் இருந்ததில்லை. மாறாக, காணாமல் ஆக்கப்பட்டவர்களை 'இறந்தவர்களாக' அறிவித்து, ஒரு குறிப்பிட்ட தொகையை இழப்பீடாக வழங்கி, இந்தத் துயர வரலாற்றை மூடி மறைப்பதிலேயே இந்தக் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் முனைப்புக் காட்டிவருகின்றது. ஆனால், அந்தத் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கோருவது நஷ்டஈடாக வழங்கப்படும் பணத்தையல்ல; தங்களின் பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை மட்டுமே. குற்றவாளிகளே நீதிபதிகளாக அமர்ந்திருக்கும் ஒரு களத்தில், பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்விதமான நீதி கிடைக்கும் என்பது ஒரு மில்லியன் டொலர் கேள்வி.

அரசாங்கம் கூறுவது போல உள்நாட்டுப் பொறிமுறை மீது மக்களுக்குத் துளியும் நம்பிக்கை இல்லை. சர்வதேசத் தரம் வாய்ந்த விசாரணைத் திறன், அரசியல் அழுத்தங்களுக்கு அப்பாற்பட்ட நடுநிலைமை மற்றும் குற்றவாளிகளைத் தண்டிக்கும் அதிகாரம் ஆகிய எதுவுமே இலங்கையின் இந்த அலுவலகத்திடம் இல்லை. மாறாக, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அல்லது ஐக்கிய நாடுகள் சபையினால் வழிநடத்தப்படும் ஒரு சுயாதீனமான சர்வதேசப் பொறிமுறை மட்டுமே, குற்றமிழைத்த அதிகாரவர்க்கத்தைக் கூண்டில் ஏற்றமுடியும். உலகின் கடந்தகால கசப்பான அனுபவங்கள் கற்பித்த பாடம் அதுதான். உள்நாட்டு விசாரணை என்பது குற்றவாளிகளைப் பாதுகாக்கும் ஒரு கவசமாகவே அமையும். ஆகவே, 'இழப்பீடு' என்ற போர்வையில் மரணப் பத்திரங்களை விநியோகிப்பதை விடுத்து, உண்மையை உலகறியச் செய்யும் சர்வதேசப் பொறிமுறைக்கு அரசாங்கம் இடமளிக்கவேண்டும். மக்களின் இதயங்களை இதயத்தால் உணர்வதாகச் சொன்ன அரசாங்கம், இன்று அந்த இதயங்களில் ஈட்டியால் குத்திக் கொண்டிருப்பதை நிறுத்திவிட்டு, சர்வதேசப் பொறிமுறையை ஏற்றுக்கொள்வதே உண்மையான நீதியாக அமையும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்**

**பொருள்:** தந்தை தன் மகனுக்குச் செய்யத்தக்க நல்லுதவி, கற்றவர் கூட்டத்தில் தன் மகன் முந்தியிருக்கும்படியாக அவனைக் கல்வியில் மேம்படச் செய்தலாகும்.


## மகளிர் தினம்-2026




# மத்தியகிழக்குப் பதற்றத்தால் சுற்றுலாவிகள் வருகை சரிவு!

**கொழும்பு, மார்ச் 10**
**இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் சாதனை அளவில் இருந்த சுற்றுலாப்பயணிகள் வருகை, இந்த மாத ஆரம்பத்தில் பின்னடைவைச் சந்தித்துள்ளது. மத்திய கிழக்கில் நிலவும் போர்ச்சூழல், அதனால் ஏற்பட்டுள்ள போக்குவரத்துத் தடைகளே இதற்குப் பிரதான காரணம் என்று கூறப்படுகின்றது.**

கடந்த ஜனவரி மாதம் 2 இலட்சத்து 77 ஆயிரத்து 327 பேரும், கடந்த பெப்ரவரி மாதம் 2 இலட்சத்து 79 ஆயிரத்து 328 பேரும் இலங்கைக்குச் சுற்றுலா வந்திருந்தனர். ஆயினும் இந்த மாதம் முதலாம் திகதியில் இருந்து 4ஆம் திகதிவரை 23 ஆயிரத்து 116 சுற்றுலாவிகள் வந்துள்ளனர். இது கடந்த ஆண்டு இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 25 சதவீத வீழ்ச்சியாகும். இலங்கைக்குவரும்சுற்றுலாப்பயணிகளில் சுமார் 34 வீதமானவர்கள் மத்திய கிழக்கு நாடுகளின் விமான நிலையங்கள் ஊடாகவே வருகின்றனர். போர் காரணமாக விமான சேவைகள் தடைப்பட்டுள்ளதால், ஐரோப்பிய நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாவிகளின் எண்ணிக்கை பெருமளவு குறைந்துள்ளது. இதனால் இலங்கைக்கு பல பில்லியன் ரூபா வருமான இழப்பு ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)



# தங்கத்தின் விலையில் தளம்பல்

கொழும்பு, மார்ச் 10
மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் நிலைமையை அடுத்து, தங்கத்தின் விலையில் நாளாந்தம் மாற்றம் ஏற்பட்டுள்ளது.
கொழும்பு செட்டியார்தெரு தகவல் களின் படி, 24 கரட் தங்கம் 4 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாவாகவும், 22 கரட் தங்கம் 3 இலட்சத்து 77 ஆயிரத்து 400 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. இலங்கையில் அண்மைக்காலமாக தங்கத்தின் விலையில் நாளாந்தம் மாற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், 4 இலட்சத்தை அண்மித்த விலைப்போக்கே நிலவுகின்றது. (க-இ)



# வெளிநாட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 10
வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத் துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர், கடுவலைப் பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் கடுவலை, வெலிவிட்ட பகுதியைச் சேர்ந்த 47 வயதுடையவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ரிவோல்வர் துப்பாக்கி கைப்பற்றப்பட்டுள்ளது. கடுவலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (க-இ)

# போதைப்பொருளுடன் இந்தியர் கைது

கொழும்பு, மார்ச் 10
கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையத்தில் குஷ் போதைப்பொருளுடன் இந்தியர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் விமான நிலையப் பிரிவு உத்தியோகத்தர்களால் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து 2 கிலோகிராம் 762 கிராம் குஷ் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளது. (க)




# இரண்டுமாத காலத்தில் 3,600 வீதி விபத்துக்கள்!

கொழும்பு, மார்ச் 10
இந்த ஆண்டின் கடந்த இரண்டு மாத காலப்பகுதியில் 3 ஆயிரத்து 600க்கும் அதிகமான வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவிததுள்ளனர்.
பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள தகவல்களின்படி, கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மார்ச் மாதம் 2ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மட்டும் 3 ஆயிரத்து 642 விபத்துகள் பதிவாகியுள்ளன. அவற்றில் 405 விபத்துகளில் 422 பேர் உயிரிழந்துள்ளனர். 866 பாரதூரமான விபத்துகள் பதிவான நிலையில் அவற்றில் ஆயிரத்து 730 பேர் காயமடைந்துள்ளனர். இது தவிர 641 விபத்துக்ளில் சொத்துகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

நாளை
புதன்கிழமை - மாசி 27
11.03.2026
சுபநேரம் : 04.53 - 06.23
ராகுகாலம் : 02.23 - 01.53

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடத்துக்கு 620 பேர் நீரில் மூழ்கி மரணம்!

## பேராசிரியர் பிரதீபராஜா தகவல்

**யாழ்ப்பாணம், மார்ச் 10**

**இலங்கையில் ஒரு வருடத்துக்கு 620 பேர் நீரில் மூழ்கி உயிரிழக்கின்றனர். அவர்களில் சுமார் 95 வீதமானவர்கள் நீச்சல் தெரியாமல் உயிரிழக்கின்றனர் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.**

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் குமரன் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் இயங்கும் குட்டிச்சுட்டி முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பெற்றோர் பிள்ளைகளின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பது போன்று, அவர்களின் வாழ்க்கைத் திறன்களை மேம்படுத்தவேண்டும். பிள்ளைகளின் 12 வயதுக்குள் அவர்களை நீச்சல் தெரிந்தவர்களாக மாற்றவேண்டியது பெற்றோர் ஒவ்வொருவரினதும் பொறுப்பு. சில விடயங்கள் எங் களுக்கு ஆபத்தான சந்தர்ப்பங் களில் உதவக்கூடியவை. எனவே பிள்ளைகளைச் சிறுவயதிலிருந்தே மனித வாழ்க்கைக்கு ஏற்றால் போல் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். நல்ல மனவலிமையுடையவர்களாகவும், எத்தகைய சூழ்நிலையையும் தாங்கிக் கொள் பவர்களாகவும் அவர்களை மாற்றியமைக்கவேண்டும் - என்றார். (க-66)

# மாணவர்களுக்கு சிலம்பம் பயிற்சி

மன்னார், மார்ச் 10

தமிழர்களின் பாரம்பரியக் கலையான சிலம்பம் பயிற்சி, மன்னாரில் வைபவ ரீதியாக நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டது. VMCT கலைமன்றத்தின் இயக்குநர் சூசைப்பிள்ளை விமலேஸ்வரனின் நெறிப்படுத்தலில், 35 ஆண்டுகளாக சிலம்பம் மற்றும் பல பாரம்பரிய கலைகளில் அனுபவம் பெற்ற பிரபல ஆசான் சூசைநாதர் யசோதரனால் பயிற்சி ஆரம்பிக்கப் பட்டது.

தலைமை ஆசிரியர் அன்ரன் பெசன் பேர்க் மெல்சின் தலைமையில், வார இறுதிநாள் சனிக்கிழமைகளில் இந்தப் பயிற்சி வகுப்பு நடைபெறும். (க-56)



# பற்றைக் காணிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 10

வேலணைப் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட நயினாதீவில், பற்றைக் காணிகளைத் துப்புரவு செய்யுமாறு வேலணைப் பிரதேசசபையால் சிவப்பு அறிவித்தல் ஒட்டப் பட்டுள்ளது. இந்த அறிவுறுத்தலை அலட்சியப்படுத்தும் பட்சத்தில் பிரதேச நலன்கருதி சட்டநடவடிக்கை எடுக்கப் படுவதுடன், காணிகள் பிரதேசசபையால் சுவீகரிக்கப்படும். அத்துடன் அதிகளவான தண்டப்பணம் அறவிடப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (க-66)

# மன்னிப்போம் மன்னிப்புப் பெறுவோம்

"எதற்கும் ஒரு நிபந்தனை உண்டு" என்று சிலர் கூறக் கேள்விப்பட்டிருக்கிறோம். இந்த அடிப்படையில் தான் பேதுரு இயேசுவிடம் "எனக்கெதிராகப் பாவம் செய்யும் சகோதர சகோதரிகளை எத்தனை முறை மன்னிக்கவேண்டும். ஏழு முறை மட்டுமா?" என்று கேட்கிறார். இயேசு அவரிடம் "எழுபது தடவை ஏழு முறை" என்று கூறி நிபந்தனையின்றி மன்னிக்க அறிவுறுத்துகிறார். இந்த உண்மையை விளக்க இயேசு "மன்னிக்க மறுத்த பணியாளன்" உவமையைக் கூறுகிறார். நாம் செய்யும் தவறுகள் எமக்குப் பெரிதாகத் தெரிவதில்லை. ஆனால் பிறர் தவறு என்றால் அதை ஊதிப் பெரிதுபடுத்தி அவர்களைத் தலைகுனிய வைக்கிறோம். இறைவனிடம் மன்னிப்புக் கேட்கும் நாம் பிறரால் மன்னிக்கப்படவேண்டும் என எதிர்பார்க்கும் நாம் மற்றவர்களை மன்னிக்க முன்வருகிறோமா? சிந்திப்போம். பிறரை மன்னிக்க இயலாமைக்குக் காரணம் நாம் பிறர் மீது கொண்ட வெறுப்பு, பொறாமை, சுயநலம், அகந்தை போன்றவையாகும். மன்னிக்கும் மனதில் அன்பு நிறைந்திருக்கும். பழிவாங்கும் எண்ணம் குறைகூறும் பழக்கம் இருக்காது. இறைவன் தரும் மன்னிப்பு அனுபவம் ஒரு சுழற்சி. அது நம்மோடு நின்றுவிடக்கூடாது. இலவசமாகப் பெற்றுக்கொண்ட மன்னிப்பை பரிமாற்றம் செய்து பிறரையும் மகிழ்விப்பது நம் மானுடக் கடமை. மன்னிப்போம் மன்னிப்புப் பெறுவோம்.

**● எஸ்.யேசுதாஸ்**
**கொழும்புத்துறை**

# இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கத்தின் ஊடாக 85ஆவது இரத்ததான முகாம் நெடியகாடு, வல்வெட்டித்துறையிலுள்ள கணபதி மஹால் திருமண மண்டபத்தில் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளது.

முகாமில் 18 வயதுக்கு மேற்பட்ட 55 வயதுக்குட்பட்ட அனைவரும் கலந்துகொள்ளலாம் என்றும், குருதிக்கொடை வழங்க விரும்பும் தன்னார்வக் கொடையாளர்களை முன்பதிவுகளை மேற்கொள்ளலாம் என்றும் வல்வெட்டித்துறை இரத்ததானச்சங்கத் தலைவர் பா. வீரசுரேந்திரன் அறிவித்துள்ளார். (எ-41-100)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். சிலருக்குக் குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். கணவன் - மனைவிக்கிடையே சிறு பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மிதுனம்:** அதிர்ஷ்டகரமான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி வெற்றிகரமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத் துணை பக்கபலமாக இருப்பார்.

**கடகம்:** தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். சகோதரர்களால் ஓரளவுக்கு நன்மை ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள்.

**கன்னி:** இன்று எதிலும் பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள்.

**துலாம்:** மகிழ்ச்சி தரும் நாளாக அமையும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். அரசாங்கவகையில் எதிர்பார்க்கும் காரியம் முடிவதில் தாமதம் உண்டாகும். தேவையற்ற செலவுகளால் மனச்சஞ்சலம் ஏற்படும்.

**மகரம்:** இன்று எந்த ஒரு விஷயத்திலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும்.

**கும்பம்:** அரசாங்கக்காரியங்கள் அனுகூலமாகமுடியும். கணவன்- மனைவிக்கிடையில் இருந்த கருத்துவேறுமை நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிரிகள் பணிந்துபோவார்கள். குடும்பம் தொடர்பாக எடுக்கும் முக்கியமான முடிவு சாதகமாகமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்பட்டு மகிழ்வோம் கோட்ட மட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச் 10

நல்லூர், யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான, செயற்பட்டு மகிழ்வோம், கோட்ட மட்டப் போட்டி இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ளது. நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் கோட்டப் பாடசாலைகளுக்கான போட்டிகள் எதிர்வரும் 25ஆம் திகதியும், கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கான போட்டிகள் எதிர்வரும் எதிர்வரும் 28ஆம் திகதியும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறும். தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கு குறுக்குப் பாய்ச்சல், நின்று நீளம் பாய்தல், முழங்கால் ஊன்றிப் பந்து எறிதல், தாம்பு தாண்டல், வேகமாகத் தடைகளைத் தாண்டி ஓடுதல் ஆகிய போட்டிகள் நடத்தப்படும் என்று யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க)

# விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 10

கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

கல்லூரி அதிபர் சதானந்தன் செல்வானந்தன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பழையமாணவர் கலாமணி முரளீதரன், யாழ்.மெதடிஸ்ட் பெண்கள் கல்லூரி ஆசிரியர் திருமதி லக்சனா முரளீதரன் ஆகியோர் கலந்துகொள்வர். (க)

## வேலை வாய்ப்பு

யாழ் நகரில் ஹார்ட்வெயார் கடைக்கு வேலை பழக விரும்பும் ஆட்கள் தேவை.
நியாயமான சம்பளம். EPF, ETF வழங்கப்படும்.

**தொடர்பு: 074 226 2271**

(CS 31428) A

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் மானிப்பாய் நகரத்தில் 12 நிலபரப்புக் காணி விற்பனைக்கு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- மானிப்பாய் நகரம் சோதி வேம்படி வித்தியாலயம் அருகில் வேம்டி வீதியில்.
- யாழ் - காரைநகர் பிரதான வீதி 300 m தூரத்தில்
- வங்கிகள், பாடசாலைகள் பிரதான வர்த்தக நிலையங்கள் 400m தூரத்தில்.
- நல்ல சூழல் நன்னீர் ஊற்று நிலம்
- பார்வையிடும் நேரம் - காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை.

**தொடர்பு:- 074 029 2338
076 990 3039
077 288 0152**

## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 30.11.2024 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 17.03.2026 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 9.00 மணி தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 18.03.2026 மற்றும் 19.03.2026**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/ பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ் /பல்கலைக்கழகம், யாழ் /கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-222 2601 : 021-222 2602

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK Pride of the Nation

## கேள்வி அறிவித்தல் - 2026/27
## கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் சலவை சேவை (Laundry service)

தலைவர், பிராந்திய பெறுகைக் குழுவினால், கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் சலவைச்சேவையினை மேற்கொள்வதற்கு தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.


| தொ. இல | பெறுகை இல | கேள்வி விபரம் | தகைமை | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/DGH/KOC/2026-2027/LS | சலவைச் சேவை | கேள்விப்பத்திரத்தில் குறிப்பிட்ட தகைமைகள் | 60,000.00 | 24.05.2026 |
| ஆவணத்தை வழங்கல்/கொள்வனவுக் காலப்பகுதி | | | 2026.03.10 தொடக்கம் 2026.03.23 வரை | | |
| பெறுகை முன் ஆயத்தக்கூட்டம் | | | 2026.03.18 அன்று பி.ப 2.30 மணிக்கு | | |
| கேள்வி திறத்தல் மற்றும் மூடுதல் | | | 2026.03.24 அன்று மு.ப 10.30 மணிக்கு | | |

1. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப் படாதவராக இருத்தல் வேண்டும் அத்துடன் அரசாங்க நிறுவனம் ஒன்றிற்கு இடையூறின்றி சேவை வழங்கியிருப்பதோடு மூன்று வருட அனுபவத்துடன் தரவு அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகைமையினை பூர்த்திசெய்தல் வேண்டும்.
2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை மாவட்ட வைத்தியசாலை, A9 வீதி ,கிளிநொச்சி எனும் இடத்திலிருந்து 10.03.2026ம் திகதியிலிருந்து 23.03.2026ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000.00 (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
3. கேள்விகள் 24.03.2026 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய றுகைக்குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் பெறுகை இலக்கத்தினை அதாவது NP/DGH/KOC/2026-2027/LS என தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி (தொலைபேசி இல-0212284111) எனும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
4. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு பெறுகைக்குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

தலைவர், பிராந்திய பெறுகைகள் குழு,
மாவட்ட பொது வைத்தியசாலை,
கிளிநொச்சி.

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 04 . 1955



மறைவு 07 . 03 . 2026

### சின்னையா தயானந்தன்

சங்கானையைப் பிறப்பிடமாகவும் லண்டன் Illford Essex வதிவிடமாகவும் கொண்ட சின்னையா தயானந்தன் அவர்கள் கடந்த 07.03.2026 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.03.2026) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியை சங்கானை கரைச்சி இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

071 9355 240 - கமலாதேவி (சகோதரி)
077 3937 684 - ஜெயந்திதேவி (சகோதரி)
076 6471 452 - ரஞ்சினிதேவி (சகோதரி)
+447735495809 - பவானந்தன் (சகோதரன்)

இல.59, Black வீதி, சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணதாசன் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தமிழ்த் துறை, தமிழியல் கழகம் நடத்தும் கவிஞர் கண்ணதாசன் நூற்றாண்டு விழா முன்னோடி இலக்கியக்களம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கலைப்பீடக் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறும். தமிழியல் கழகத் தலைவர் யோ. நிவேதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக தமிழ்நாடு கவிஞர் காவிரி மைந்தன், சிறப்பு விருந்தினராக எழுத்தாளர் கவிஞர் கே. தி.சண்முகராஜா ஆகியோர் கலந்து கொள்வர். (க)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 85 ரூபாய்.
நிலம் இழுத்து பதிக்க - 110 ரூபாய்
077 334 1281
(CS/60955) J-1

# மெய்வல்லுநர் திறனாய்வு

மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலையின் அதிபர் கனகரத்தினம் மகிந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் ஸ்ரீகுமரனும், சிறப்பு விருந்தினராக பழைய மாணவி சட்டத்தரணி திருமதி தர்ஷிகா திலீபனும், கௌரவ விருந்தினர்களாக சாவகச்சேரி ச.தொ.ச. முகாமையாளர் ப.சுதர்சன், நுணாவில் மேற்கு கிராம அலுவலர் ப.பிரதீபன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-41)

## மணி விழா வாழ்த்து



### திருமதி செல்வராணி உதயகுமாரன்

**சேவை விபரம்:**

- யா / வட்டு மத்திய கல்லூரி - 26.03.1990 - 28.05.2002 வரை
- யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை (பகுதி நேரம்) - 26.03.1990 - 01.01.1993 வரை
- யா / மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம் - 29.05.2002 - 31.09.2002 வரை
- யா / சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி - 01.10.2002 - 08.02.2015 வரை
- யா/ கைதடி குருசாமி வித்தியாலயம் (பகுதி நேரம்) - 07.10.2016 - 16.02.2018 வரை
- யா / சந்திரபுர ஸ்கந்தவ ரோதய ம.வி - 09.02.2015 - 09.03.2026 வரை

எமது பாடசாலையில் மனைப்பொருளியல் பாட ஆசிரியராக கடமையாற்றி 09.03.2026 அன்று ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியர் திருமதி. செல்வராணி உதயகுமாரன் அவர்களுக்கு எமது மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:- ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா / சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி

## யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை(வ-து)

### கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தை பண்டிகைக் காலங்களில் வாடகைக்கு வழங்குவதற்கான மீள் கூறுவிலை கோரல்-2026


2026ம் ஆண்டின் பண்டிகைக் காலங்களில் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் விற்பனை நடவடிக்கையினை மேம்படுத்த விரும்பும் வர்த்தகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சபையில் விநியோகிக்கப்படும் விண்ணப்பப் படிவத்தை அலுவலக நேரத்தில் ரூபா 100.00 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பதாரினால் மீளளிக்கப்படாத வைப்புத்தொகையாக ரூபா 5000.00 செலுத்தப்படுதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தினை தபால் உறையில் இட்டு பதிவுத் தபாலில் "கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தினை பண்டிகைக் காலங்களில் வாடகைக்கு வழங்குவதற்கான மீள் கூறுவிலை" எனக்குறிப்பிட்டு 17.03.2026 இற்கு முன்னதாக கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

செயலாளர்
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப 2வது மாடி
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச்சபை
இல12, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்



மலர்வு 01.04.1939 — உதிர்வு 01.03.2026

### இராசா குமாரகுலசிங்கம்

**(முன்னாள் இ.போ.ச. பொறியியலாளர், சாரதி)**

கல்வம் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இராசா குமாரகுலசிங்கம் அவர்கள் கடந்த 01.03.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசா - சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் பாசமிகு கணவரும், மற்றும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளின் பாசமிகு தந்தையும், பேரனும், பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.03.2026) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காகக் கலைவாணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 915 3146

(CS 60953) A

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 . 10 . 1948 — மறைவு 20 . 02 . 2025

அமரர்

### குணரெட்ணம் நாகேஸ்வரி

திதி: அபரபட்ச ஸப்தமி

எங்கள் தாயே அம்மா
அன்பினால் அனைவரையும் கட்டிப்போட்ட தாயே
பொறுமையையும் அடக்கத்தையும் கொண்ட தாயே
எங்களுக்கு கல்வியறிவையும் தன்னம்பிக்கையையும்
வளர்த்த தாயே
சுயநலமின்றி நன்றி உணர்வோடு வாழ்ந்த தாயே
கபடமற்ற உள்ளத்தைக் கொண்ட தாயே
மண்ணுலகத்தைப் போல விண்ணுலகம் சென்றாலும்
உங்களை வாழவைப்பேன் என்று கூறிய தாயே
எங்களை விட்டுப்பிரிந்து ஓராண்டு சென்றதே தாயே.
ஒவ்வொரு நினைவுகளும் எங்கள் உள்ளத்தை
வாட்டுகின்றதே தாயே

உங்கள் ஆத்மா சாந்தியடைந்து இறைவனின் பாதங்களை
சரணடைய கோடி நமஸ்காரம் நன்றி இறைவா.
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*


198/1, பொன்னப்பா லேன்
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறைந்து மறையாத

# ஓராண்டு நினைவில்...



## (1936-2025)

# உயர்திரு. செல்லையா பொன்னுசாமி

## (S.P சாமி)

ஸ்தாபகர் - தினக்குரல், யாழ்.தினக்குரல்

**Founder - Northern Central Hospital (pvt) Ltd.,**
**Northern Beach Hotel (pvt) Ltd., S.P.Samy Investment Complex (pvt) Ltd.**

முன்னாள் தலைவர் - வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயம்,
முன்னாள் தலைவர் வடகொழும்பு இந்துபரிபாலன சங்கம், முன்னாள் உபதலைவர் - அகில இலங்கை இந்துமாமன்றம்,
முன்னாள் உப தலைவர் - சேர் பொன்னம்பலம் அருணாச்சலம் நம்பிக்கை நிதியம், முன்னாள் தலைவர் - புறக்கோட்டை வர்த்தகர் சங்கம்

வேலணையில் விளைந்த
உழைப்பின் விதை
வாழ்க்கை பாதையில்
உயர்ந்த விருட்சம்
சோதனைகள் கண்டு
சோர்வடையாத மனம்
மனித நேயத்தை
மறக்காத மனிதம்

சமூக நலனை என்றும்
சிந்தித்த நல் இதயம்
உழைப்பில் நேர்வழி
குணத்தில் ஓர் வழி
மௌனம் அவர் மொழி
சமூகம் சாமியின்
இன்னொரு விழி

மருத்துவ சேவையால்
நிலையானவர்
ஊடகத்தால் தினம்
தமிழர்காய் பேசியவர்
சாமியார் கண்ட
கனவுகள் ஏராளம்
சமூகத்துக்காய்
செய்தவை தாராளம்
தன்னம்பிக்கையின்
அடையாளம்
நீங்கள் விதைத்த
நன்மைகள்
காலம் கடந்தும்

அறுவடையாகும்
உங்கள் உழைப்பும்
சமூக அக்கறையும்
தலைமுறைகள்
கடந்தும் பேசும்...
சாமி..! சாமியானார்..!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!
ஓம் சாந்தி!


**யாழ்.தினக்குரல்**

**Northern Central Hospital**

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### தம்பையா இராஜரெத்தினம்

(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் பனை அபிவிருத்திச் சபை, முன்னாள் செயலாளர் ப.நோ.கூ. சங்கம் சங்காணை, முன்னாள் செயலாளர் உரும்பிராய் கற்பக விநாயகர் கலாசார மண்டபம்)

மாவிட்டப் புறத்தைத் பிறப்பிடமாகவும் சங்காணை சிலம்புப் புளியடியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா இராஜரெத்தினம் 09.03.2026 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், திலகலட்சுமியின் அன்பு கணவரும், தர்மினியின் (விரிவுரையாளர் - ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி) பாசமிகு தந்தையும், நாகசெல்வம் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - பிரதேச செயலகம் சங்காணை) அன்பு மாமனாரும், லக்ஷப்பிரதன் (மாணவன் - SLIIT NORTHERN UNI), கிதுர்ஷனா (மாணவி - வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான சுந்தரமூர்த்தி, சுப்பிரமணியம், நடராஜா, தங்கராஜா ஆகியோரின் அன்பு சகோதரரும், அமரர் இராஜலட்சுமி, ஞானேந்திரா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.03.2026) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சங்காணை கரச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


சிலம்புபுளியடி,
சங்கானை.

தகவல்:
**குடும்பத்தினர்**
**070 6255 829**

(CR 47205)A

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
01 . 01 . 1945



ஆண்டவன் அடியில்
06 . 03 . 2026

### மருசிலின் இம்மானுவல் ஜோசப்

சிறுவிளான், இளவாலையைப் பிறப்பிடமாகவும் யாழ் பழைய பூங்கா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மருசிலின் இம்மானுவல் ஜோசப் அவர்கள் கடந்த 06.03.2026 வெள்ளிக்கிழமை அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருசிலின் - மேரிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், இராஜேந்திரம் - றோசலின் தம்பதியினரின் மருமகனும், மேரி சுசிலா (மல்லிகா) அவர்களின் அன்புக் கணவரும், சுபாசினி (பவானி), சுதர்சன், யூடினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், றொகான், கீர்த்திகா, கிரேஷியன் ஜோன்சன் ஆகியோரின் மாமனாரும், எரிக், ஜோணஸ், சகானா, சரணிகா, ஜெனிபர், ஜான்சி, ஜொஸ்லின், ஜெனிலியா ஆகியோரின் பேரனும், லில்லி பிலோமினா, பிலிப்பானந்தம், மேரி திரேசா ஆகியோரின் சகோதரனும், சூசைதாசன், லலிதாதேவி, காலஞ்சென்ற மரியதாஸ், ராஜன், சித்திரா, மனோ ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் நாளை (11.03.2026) புதன்கிழமை அன்று பிற்பகல் 2:30 மணியளவில் யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்**
**தொடர்புகளுக்கு: 0774694704**

(CS 31420)A

# மரண அறிவித்தல்



## சிவதாசன் செல்வராணி

புத்தூரை பிறப்பிடமாகவும், கனகபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும், ஓமந்தை மாணிக்கர்வளவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிவதாசன் செல்வராணி அவர்கள் நேற்று (09.03.2026) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் புத்தூரைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதியரின் மருமகளும், சிவதாசனின் அன்பு மனைவியும், விஜயராணி, சரோஜினிதேவி, புஸ்பராணி, அமுதராணி, சுகிர்தமலர், சிவரூபராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவாஞ்சலி, சிவலலிதா, சிவரூபி, திருவரன், திருவேகரன் ஆகியோரின் அன்புத் தாயும், சிவகுமார், கிருஸ்ணானந்தா, சூரியகுமார், இன்பரூபி, மதனசாந்தி ஆகியோரின் அன்பு மாமியும், நிலக்ஷன், நிஷாந்தன், நிவேதிகா, அனுஜன், கீர்த்தனன், அபிஜனன், சஞ்ஜியா, சரணியா, நிலோயன், திகழினி, அஸ்வினி, கவின், நிரந்தனா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், விஹானா, ஐஸ்வின், கிரித்திக், மித்ரன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.03.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மாணிக்கர்வளவு ஓமந்தையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஓமந்தை வேப்பங்குளம் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிறப்பு
**11.06.1949**

இறப்பு
**09.03.2026**

**தகவல் : மகன் Dr. திருவேகரன்**
**077 060 7123**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிபொருள் விலைகள் கணிசமாக அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 10

எரிபொருள்களின் விலைகள் நேற்று நள்ளிரவில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கணிசமாக அதிகரித்துள்ளன.

புதிய விலைச்சூத்திரத்தின்படி,

92 ஒக்ரேன் பெற்றோல் 24 ரூபாவால் அதிகரித்து புதிய விலையாக 317 ரூபாவும், 95 ஒக்ரேன் பெற்றோல் 25 ரூபாவால் அதிகரித்து புதிய விலையாக 365 ரூபாவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், ஓட்டோ டீசல் 22 ரூபாவால் அதிகரித்து புதிய விலையாக 303 ரூபாவும், சுப்பர் டீசல் 24 ரூபாவால் அதிகரித்து புதிய விலையாக 353 ரூபாவும், மண்ணெண்ணெய் 13 ரூபாவால் அதிகரித்து புதிய விலையாக ரூ.195 ரூபாவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (ம)

### மத்திய கிழக்குப் போர்

## ரஷ்யா களமிறங்க சாத்தியம் அதிகம்

தெஹ்ரோன், மார்ச் 10

மத்திய கிழக்கில் இடம்பெற்றுவரும் போரில், ரஷ்யப் படைகள் தலையிடுவதற்குச் சாத்தியங்கள் உள்ளன என்று போரியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

போர்க்களத்தில், ஈரானால் ஏவப்படும் ட்ரோன்கள் மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க நிலைகளை அடுத்தடுத்துத் தாக்கிவருகின்றன. இதையடுத்து, ஈரானிய ட்ரோன்களை அழிப்பதற்காக, அந்தத் தொழில்நுட்பத்தில் தேர்ச்சி பெற்ற உக்ரைனிய நிபுணர்களின் உதவியை அமெரிக்கா நாடியிருந்த நிலையில், உக்ரைனும் அதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளது.



இதையடுத்தே, ஈரானுக்கு எதிராக உக்ரைன் களமிறங்கும் பட்சத்தில், ஈரானுக்கு ஆதரவாக ரஷ்யா களமிறங்கச் சாத்தியம் உள்ளதாக போரியல் நிபுணர்கள் கூறியுள்ளனர். இந்தப் போரில் ரஷ்யா களமிறங்கினால், அது உலகப்போருக்கான அடிப்படையாக அமையும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

### ரூபா 62 கோடி...

அவர் உதயனுக்கு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் விசேட குற்றவிசாரணைப் பிரிவில் கடந்த வருடம் 225 மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன. வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக இடம்பெறும் மோசடிகள், இணையக் குற்றங்கள் ஊடாக இடம்பெறும் மோசடிகள், காணி மோசடிகள், ஒன்லைன் மோசடிகள் என்பனவே அவற்றில் கணிசமானவை.

இந்த மோசடிகள் மூலம் 62 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட நிதி முறைகேடு செய்யப்பட்டுள்ளது. அவற்றுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 200 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், அவர்களுக்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இத்தகைய மோசடிகள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அண்மைக்காலமாக மீண்டும் அதிகரித்து வருகின்றன. இலங்கையின் வேறு பகுதிகளைக் காட்டிலும் யாழ்ப்பாணத்திலேயே அதிகளவு மோசடிகள் இடம்பெறுகின்றன. வெளிநாட்டு வாழ்க்கையில் மக்களுக்கு இருக்கும் ஆசையை மோசடியாளர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, இவ்வாறான மோசடியாளர்களிடம் பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும் - என்றார். (அ-ம-26)

### பொருளாதார...

மாக எதிர்கொள்ளும் நிலையில் நாடு உள்ளது என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழலால் உலகப் பொருளாதாரம் நிச்சயமற்ற நிலையை எதிர்கொண்டுள்ளது. எரிபொருள் விலையேற்றம் தொடக்கம் பல்வேறு விடயங்களில் உறுதியற்ற நிலை அதிகரித்து வருகின்றது. எனினும், இந்தத் தளம்பல் நிலையை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடிய வகையில், 7 பில்லியன் டொலருக்கும் மேற்பட்ட வெளிநாட்டுக் கையிருப்புடன் இலங்கையின் நிதி நிலை வலுவாகக் காணப்படுகின்றது. பொருளாதார நெருக்கடி நிலவிய காலப்பகுதியில் 70 சதவீதமாகக் காணப்பட்ட பணவீக்கம், தற்போது 1.6 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றங்கள் சீர்குலைந்துவிடாத வகையில் மிகவும் கட்டுக்கோப்பான நிதிக் கொள்கையை இலங்கை பின்பற்றி வருகின்றது - என்றார். (அ-ம)

### மகளைத்...

இவரது மகளான கா.ஜெரோமி 2009 ஆம் ஆண்டு கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில், 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 7ஆம் திகதியன்று வெளியான, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலவின் தேர்தல் பரப்புரைத் துண்டுப்பிரசுரத்தில் தனது மகளும் உள்ளார் என்று அவர் கூறிவந்தார். இதுதொடர்பில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவிலும் சாட்சியம் வழங்கியிருந்தார். எனினும், இந்த விடயத்தில் முறையான விசாரணைகள் இடம்பெறவில்லை. இவ்வாறான நிலையில், தனது மகளைக் காணாமலேயே அவர் நேற்றுக் காலமானார். (அ-ம-110)

### முன்னாள்...

செய்யப்பட்டுள்ளார். 24 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட சொத்துக்களை சட்டவிரோதமாகக் குவித்தார் என்ற குற்றச்சாட்டில் அவரிடம் நேற்று விசாரணைகள் இடம்பெற்றன. இதையடுத்தே, லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம)

### சிறுமி...

இந்த வழக்கு விசாரணைகள் ஆரம்பத்தில் வவுனியா மேல் நீதிமன்றத்திலும், பின்னர் கிளிநொச்சி மேல் நீதிமன்றத்திலும் இடம்பெற்ற நிலையில், கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஜி. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் நேற்றுத் தீர்ப்புக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே, சந்தேகநபர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டு அவருக்கு 10 வருடகால கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 10 லட்சம் ரூபா இழப்பீடு வழங்குமாறும், தவறும் பட்சத்தில் மேலும் இரு வருடகால சாதாரண சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. அத்துடன், 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும் தவறும் பட்சத்தில் மூன்று மாதகால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் என்றும் நீதிமன்றம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-ம-55)

### ஈரானியப்...

தில் பத்தரமுல்ல சீலரத்ன தேரரும் கலந்துகொண்டார். அங்கு கருத்துத் தெரிவிக்கும்போதே, ஈரானியப் படையினரை இலங்கை உடனடியாக வெளியேற்ற வேண்டும் என்று கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மத்திய கிழக்குப் போரில் ஈரானுக்கு ஆதரவான நிலைப்பாட்டை நாங்கள் எடுக்கக்கூடாது. மாறாக இஸ்ரேலுக்கும் அமெரிக்காவுக்குமே இலங்கை ஆதரவளிக்க வேண்டும். ஆதலால், இலங்கையில் தஞ்சம் கோரியுள்ள ஈரானிய கடற்படையினர் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும். அவர்களை இங்கு வைத்திருக்கக்கூடாது. இலங்கையில் முஸ்லிம்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது. இவ்வாறான நிலையில், முஸ்லிம்களுக்குத் தஞ்சமளிக்கும் வகையில் இலங்கை அரசாங்கம் செயற்படுவதை ஏற்க முடியாது - என்றார்.

இந்தக் குழுவினர் இலங்கையில் தஞ்சமடைந்த மியான்மர் அகதிகளுக்கு எதிராகவும் முன்னர் ஆர்ப்பாட்டம் செய்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

### பூசகர்களிடையே...

ஆலயமொன்றின் பூசகருக்கும், நயினா தீவில் தொழில் நிமித்தம் தங்கியிருந்த மற்றொரு பூசகருக்கும் இடையே தொழில் நிமித்தம் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இந்தக் கருத்து முரண்பாடு நேற்றுக் கைகலப்பாக மாறியதைத் தொடர்ந்தே, நயினாதீவு விநாயகர் ஆலயத்தின் பூசகர் மற்றைய பூசகர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியுள்ளார். தாக்குதலுக்கு உள்ளான பூசகர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார், தாக்குதல் நடத்தியவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-66-26)

### 6 கிலோ...

படையால் கைப்பற்றப்பட்டதுடன், அவற்றைக் கடத்திய குற்றச்சாட்டில் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மாதகல் கடற்பரப்பு வழியாக இந்தியாவுக்குத் தங்கம் கடத்தப்படுகின்றது என்று கடற்படையினருக்கு இரகசியத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து விரைந்து செயற்பட்ட கடற்படையினர், நடுக்கடலில் படகொன்றை இடைமறித்துச் சுற்றிவளைத்தபோதே அந்தப் படகிலிருந்து 6 கிலோ 85 கிராம் பெறுமதியான தங்கக் கட்டிகளைக் கைப்பற்றப்பட்டன.

அவற்றைக் கடத்திய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டதுடன், அவர்கள் இருவரும் சான்றுப்பொருள்களுடன் காங்கேசன்துறை சுங்கத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். மேலதிக விசாரணைகளைத் தொடர்ந்து, அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-26-113-66)

### ஹெரோய்னுடன்...

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் விநியோகத்தில் ஈடுபட்ட ஆணொருவரும், பெண்ணொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 5 கிராம் 400 மில்லிகிராம் ஹெரோய்னும், 630 போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. மேலதிகவிசாரணைக்குப் பின்னர் சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னாட்டு மாநாட்டுக்கு ஆய்வுக்கட்டுரை கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 10

மலேசியாவின் ஈப்போ முத்தமிழ்ப் பாவலர் மன்றத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு நடத்தவுள்ள, பன்னாட்டுத் தொல்காப்பிய ஆய்வு மாநாட்டுக்கு, ஆய்வுக்கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன.

அகராதியியல் கருத்துகள், அரசியல் கருத்துகள், அறக்கருத்துகள், அறிவியல் கருத்துகள், இசைக் கருத்துகள், இலக்கணவியல் கருத்துகள், இலக்கியவியல் கருத்து கள், இலக்கியத் திறனாய்வியல் கருத்துகள், உயிரினங்களின் தோற்றவியல் கருத்துகள், உளவியல் கருத்துகள், கட்டமைப்பியல் கருத்துகள், கலையியல் கருத்துகள், கோட்பாட்டியல் கருத்துகள், சமய தத்துவ மரபியல் கருத்து கள், சமூகவியல் கருத்துகள், சூழலியல் கருத்துகள், தமிழ்தமிழரியல் கருத்துகள், சொற்களஞ்சியக் கருத்து கள், தாவரவியல் கருத்துகள், தொன்மைக் கருத்துகள், நாடகவியல் கருத்துகள், பண்பாட்டியல் கருத்துகள், மானிடவியல் கருத்துகள், புழங்குபொருள் சார் கருத்து கள், மொழியியல் கருத்துகள், மொழி வளர் கருத்துகள், வரலாற்றியல் கருத்துகள், அகப்பொருளியல் கருத்து கள், புறப்பொருளியல் கருத்துகள், மரபியல் கருத்துகள், போரியல் கருத்துகள், தொல்காப்பியமும் திருக்குறளும், தொல்காப்பியமும் சிலப்பதிகாரமும், தொல்காப்பியமும் மணிமேகலையும், தொல்காப்பியமும் பிற இலக்கிய நூல்களும், தொல்காப்பியமும் பிறமொழி இலக்கிய நூல்களும், தொல்காப்பியமும் பிறமொழி இலக்கண நூல்களும், தொல்காப்பிய அறம், தொல்காப்பியர் காலம், தொல்காப்பிய அமைப்பியல் ஆகிய தலைப்புகள் மட்டுமன்றி, இவை தொடர்பான பிற தலைப்புகளிலும் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கலாம்.

கட்டுரைகளை 10 பக்கங்களுக்கு மிகாமல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15க்கு முன்னர், arumugamkannan6161@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

விநியோகஸ்தர் தேவை

* ரெடி மிக்ஸ் பூச்சு கலவை கட்டு கலவை மற்றும் கான்கிரீட் கலவைகள்.
* கட்டிட வேலைகளுக்கு. நேரம் மிச்சப்படுத்தும் தயாரிப்பு,

நல்ல லாப வாய்ப்பு
வடக்கு, கிழக்கு
மற்றும்
நாடு முழுவதும்
விநியோகஸ்தர்கள் தேவை..
ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

Contact: 076 324 9977
070 299 3001
011 351 6516

(CS 31427) A

# மெய்வல்லுநர் போட்டி



யாழ்.வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமைகல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. கல்லூரி அதிபர் திருமதி.கிருஷ்ண லதா குலசங்கர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வடமராட்சி வலய கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர் மோகனசுந்தரம் தெய்வேந்திரா, மீசாலைவீரசிங்கம்மத்திய கல்லூரியின் ஆசிரியை திருமதி சிவரஞ்சினி தெய்வேந்திரா, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் திருமதி அன்பரசி கருணாகரன் ஆகியோர்விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (எ-41-66)

மரண அறிவித்தல்



திருமதி சுசேந்திராதேவி செல்வராசா

கொக்குவில் கிழக்கினை பிறப்பிடமாகவும் தற்பொழுது கொழும்பினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சுசேந்திராதேவி செல்வராசா அவர்கள் 03.03.2026 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை - விஜயலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வராசா (நாதன்) அவர்களின் பாசமிகு மனைவியும், மயூரிகா (லண்டன்), கபிலன் (துபாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுதர்ஷனின் அன்பு மாமியும், கமலநாயகி, பாலகுமார், சௌந்தரராஜன், நந்தகுமார், அருணாதேவி, ராஜ்குமார், புவனேந்திரகுமார் ஆகியோரின் அன்பு சகோதரியும் அமுதாம்பிகை, காலஞ்சென்ற இளமுருகன், சிவகுமார், கமலாம்பிகை, செல்வகுமார், சகாதேவன், ஸ்ரீனிவாசன், குகதாஸ், தணிகேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும், விகாசன் மற்றும் ஹர்ஷினி ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு இல்லத்தில் நாளை (11.03.2026) புதன்கிழமை வைக்கப்பட்டு 12.03.2026 (வியாழக்கிழமை) காலை 9.00 மணிக்கு இறுதிசடங்குகள் நடைபெற்று கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

நந்தாவில் லேன்,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 4273 398 - கபில் (மகன்)

(CS 31421) A



# பனை மரங்களைத் தறித்து கடத்த முற்பட்ட மூவர் கைது

வடமராட்சிக் கிழக்கு வெற்றிலைக்கேணிப் பகுதியில் பனை மரங்களைச் சட்ட விரோதமுறையில் கடத்த முற்பட்ட மூவர் கடந்த சனிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த பகுதியில் தொடர்ச்சியாகச் சட்டவிரோதமான முறையில் பனைமரங்கள் அழிக்கப்பட்டு, வெளி இடங்களுக்கு அதிகளவில் கடத்தப்படுகின்றன என்று மருதங்கேணிப் பொலிஸாருக்கு அதிக முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. அதனடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குறித்த பகுதியை நேற்று முன்தினம் சுற்றிவளைத்தனர். அங்கு அனுமதிப்பத்திரமின்றிக் கடத்துவதற்காக மறைத்து வைக்கப்பட்ட பனைமரங்கள் கண்டறியப்பட்டன. அதனுடன் தொடர்புடைய மூவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கைதான சந்தேகநபர்களை விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.